6

நரபலி

கங்காராம் குடிசையின் சாளரத்தின் வழியாகத் தெரிந்த அந்த குல்மொஹர் மரத்தை அதன் ரத்தச் சிவப்பு மலர்களை வெறித்துப் பார்த்தான். மரம் இப்போது பூத்துக் குலுங்குவதிலிருந்து அவனுக்குக் கல்யாணமாகி ஒரு வருஷம் ஓடிப்போனது புரிந்தது. கோடைக் காலத்தில் தான் இப்படி இலையே தெரியாமல் குலமொஹர் ரத்த சிவப்பில் வாசலில் பந்தல் விரித்திருக்கையில் அவன் சாரதாவை, அவனுடைய சாருவை, அழைத்து வந்தான்.

ஒரு வருஷம் எவ்வளவு விரைவாக ஓடிவிட்டது! இந்த ஒரு வருஷத்தில் சாரு ஒவ்வொரு விநாடியும் அவனுக்கு நிறைவைத் தந்த மாதிரி அவனுள் ஒரு பிரமிப்பு ஏற்பட்டது. பதிலுக்கு அவனால் என்ன கொடுக்க முடிந்தது? அன்பை வார்த்தைகளால் மட்டும் தான், அரவணைப்பினால் மட்டும் தான் காட்ட முடிந்தது. கேவலம் கண்ணாடி வளையல்கள் கூட வாங்கித் தர முடியவில்லை, கங்காரம் உதட்டைக் கடித்துக் கொண்டான். இதற்குக் கூட வக்கில்லாதவனுக்கு கல்யாணம் ஒரு கேடா? அவனுடைய தாய் மாமன் பாபு தான் காலா காலத்தில் அதது நடக்க வேண்டியது நடந்தே ஆகணும் என்று கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணி பெண் வீட்டார் கொடுத்த வரதட்சணையை சுருட்டிக் கொண்டு சாரதாவை கங்காரமிடம் ஒப்படைத்து விட்டுப் போனான்.

கங்காராமுக்குதான் கல்யாணம் வேண்டாம் என்று சொல்ல புத்தி தோன்றிற்றா? சாரதாவை அவன் நேரிடப் பார்க்கவில்லை யானாலும் அவளைப் பற்றிய வர்ணனைகளைக் கேட்டே அவன் உடம்பில் ஏற்பட்ட ஜ்வாலையை அடக்க அவளைக் கைப்பற்று வதைத் தவிர வேறு வழியேயில்லை என்று தோன்றிற்று. அப்பொழுது வயிற்றைப் பற்றின அதிகக் கவலையும் இல்லை, டாக்கூரின் பண்ணையில் வேலையிருந்தது. டாக்கூர் அள்ளிக் கொடுத்து விடாவிட்டாலும், அவனுக்கும் சாருவுக்கும் போது மளவுக்குக் கிடைத்தது.

ஒரு நாள் டாக்கூர் பெரிதாக ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தார். சில அரசாங்க அதிகாரிகள் திடீரென்று பாதி பண்ணை நிலம் அரசாங்கத்துக்குச் சொந்தம் என்றும் அதில் அரசாங்கக் கட்டடம் ஒன்று கிளம்பப் போகிறது என்றும் வளைத்துக்கொண்டு விட்டார் களாம். கங்காராமுக்கு அதன் முழு தாத்பர்யமும் அப்பொழுது புரியவில்லை. அது எப்படி ஸாத்தியம் என்று புரியவில்லை. இரண்டு மூன்று பரம்பரையாக அந்தப்பண்ணை டாக்கூர் வீட்டுக்கு சொந்தமாக இருக்கும் போது? இப்பொழுதெல்லாம் இது மாதிரி அடாவடித்தனம் சகஜமாக நடப்பதாக அவனைவிட கொஞ்சம் எழுத்து வாசனை தெரிந்தவர்கள் பேசிக் கொண்டார்கள். அது மாத்திரமில்லை, இப்பொழுதெல்லாம் கோர்ட் கேஸ் என்று எங்கும் போக முடியாதாம். இப்படி ஏதாவது நடந்தால் வாயை மூடிக் கொண்டு இருக்க வேண்டியது தான். மேலிடத்தை இன்னும் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது தான் புத்திசாலித்தனம்....கங்காராமுக்குப் புரியவில்லை.

டாக்கூர் புலம்புவதைப் பார்த்து ஐய்யோ பாவம் என்றிருந்தது. அவனையும் அவனது சகாக்களையும் அவர் வேலையிலிருந்து நீக்கினபோது அவர் என்ன செய்வார் பாவம் என்று தோன்றிற்று. ஆனால் கொஞ்ச நாளிலேயே அவனும் சாருவும் அடுத்தவேளை சோற்றுக்கு என்னவழி என்று யோசிக்க வேண்டியநிலை வந்தபோது, டாக்கூரின் குறையாத தொந்தியும் மாறாத வெற்றிலையும்

ஏப்பங்களும் பார்க்கையில் அரசாங்கத்தின் காரியத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டது தான்தான் டாக்கூர் இல்லை என்று புரிய ஆரம்பித்தது....

சாரு எவ்வளவோ சாமர்த்தியமாகக் குடித்தனம் செய்தாள். கொல்லையில் காய்கறிகளை வளர்த்தாள். கூடை வேய்ந்தாள். எல்லாவற்றுக்கும் மேலே வயிறு ஓலமிட்டது.

ஒரு நாளைக்கு அவனும் சாருவும் சோர்ந்து உட்கார்ந்திருந்த போது துக்காரம் வந்தான். டாக்கூர் வீட்டில் சாருவுக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னான். ''சாப்பாட்டோடு சம்பளமும் கிடைக்கும். இந்த மாதிரி மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஏன் உட்கார்ந்திருக்கிறீர்கள். கொஞ்சம் புத்திசாலித்தனமாக சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றான். அப்பொழுதே சாருவை அழைத்துக் கொண்டு கங்காரம் டாக்கூர் வீட்டுக்குப் போனான். துணிதுவைத்து பாத்திரம் தேய்ப்பதற்கு இரண்டு வேளை சாப்பாடும் மூப்பது ரூபாயும் தருவதாக எஜமானியம்மாள் சொன்னாள்; அடேயப்பா! ஒன்றுமில்லாமல் உட்கார்ந்திருந்ததற்கு இது ஏதோ நிதியைக் கண்ட மாதிரி இருந்தது கங்காராமுக்கு. பெரிய கும்பிடு போட்டு விட்டு வழியெல்லாம் டாக்கூர் வம்சத்தின் தயாள குணத்தைப் பற்றி பேசியபடி இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

மறுநாளிலிருந்து சாரு வேலைக்குப் போய் வந்தாள். அவள் கொண்டு வந்து சாப்பாட்டோடு கொஞ்சம் சோறு ரொட்டியை செய்து கொண்டு இரண்டு பேரும் நாள்களை ஓட்ட ஆரம்பித்தார்கள். ஆனால் கங்காராமுக்கு மனசை உறுத்திக் கொண்டேயிருந்தது, ஒரு பெண்பிள்ளை சம்பாதித்து எவ்வளவு நாள் உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவது? அவனும் எவ்வளவோ வேலைக்கு முயன்றான். எங்கும் கிடைக்கவில்லை. ஏதாவது தொழிலை ஆரம்பிக்கலாம் என்றால் அதற்கு மூலதனத்துக்கு எங்கே போவது? டாக்கூரை அணுகி அவன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டபோது அவருக்கு மகா கோபம் வந்தது. அவரே முக்கால் சொத்தை பறி கொடுத்துவிட்டு உட்கார்ந்திருக்கும்போது அவன் எந்த தைரியத்தில் வந்து கேட்டான்?

அவனுக்கு உதவ வேண்டும் என்கிற எண்ணத்தில் தானே சாருவையே வேலைக்கு வைத்துக் கொண்டது?

அவர் கையை அசைத்து அசைத்து பேசுகையில் விரல்களில் பளிச்சிட்ட வைர மோதிரங்களையும் மஸ்லின் ஜிப்பாவுக்குள் திணறிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அந்த வயிற்றையும் பார்த்துவிட்டு அவன் வாயை மூடிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

கத்திரி வெண்டைப் பாத்திகளைக் கொத்திய நேரம் போக பாக்கி நேரங்களில் குல்மொஹர் மலர்களைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் வேளையில் அவனுக்கு சலிப்பாக வந்தது. நான்கே தெருக்கள் கொண்ட இந்த கிராமத்தில் சகலத்துக்கும் இந்த டாக்கூரையே நம்பிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் ஜனங்கள் கொண்ட இடத்தில் அவனுக்கு என்ன எதிர்காலம் இருக்கிறது? சாருவின் முப்பது ரூபாய் சம்பளத்தை நம்பிக்கொண்டு எத்தனை காலம் ஓட்ட முடியப்போகிறது? நாளைக்குக் குழந்தை குட்டி என்று தோன்றினால் சாருவால் வேலை பார்க்க முடியுமா? குழந்தைகள் பிறக்கத்தான் போகின்றன. அதுவும் நிறைய கைகள் இருந்தால்தானே ஊதியமும் பெருகும்? ஆனால் இப்போதைய பிரச்சனையை எப்படி சமாளிப்பது?

இடைக் கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டது. சாரு உள்ளே நுழைந்தாள். முகமெல்லாம் கன்றி சிவந்திருந்தது அய்யோ பாவம் வெய்யலில் நடந்து வந்திருக்கிறாள் என்று அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. ஆனால் அவள் சாப்பாடு ஏதும் கொண்டுவராமல் வெறுங்கையுடன் வந்தது அவனுக்கு வியப்பாக இருந்தது.

''ஏன் சாப்பாடு ஏதுமில்லையா இன்னிக்கு?''

அவள் அவனுடைய மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விசித்து வசித்து அழுதாள். அவன் திடுக்கிட்டுப்போய் அவள் தலையைக் கோதியபடி கேட்டான்-

''என்ன நடந்தது சாரு? என்ன நடந்தது?''

அவள் வெகு நேரம் விசும்பினாள்.

''நாம் பட்டினியாக செத்தாலும் பரவாயில்லை. என்னை அந்த டாக்கூர் வீட்டுக்கு அனுப்பாதே!''

அவன் நிலைகுலைந்து போனான்.

''ஏன் என்ன நடந்தது?''

''அந்த டாக்கூர் ஒரு சண்டாளன். திட்டம் போட்டு தான் என்னை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறான். இன்னிக்கு எஜமானி யம்மா வெளியூருக்கு போயிருக்கிறாள். வீட்டிலே வேறு ஒருத்தரும் இல்லே. என்னைப் பலாத்காரப் படுத்தப் பார்த்தான் அந்தப் பாவி...''

கங்காராமுக்குக் கண்கள் சிவந்து போயின.

''என்னது? அப்படியா செஞ்சான் அந்தச் சண்டாளன்?''

அவன் சடேரென்று எழுந்தான் அரிவாளை எடுத்துக் கொண்டு. சாரதா நடுங்கிப்போனாள். தலையில் அடித்து கொண்டாள். ''ஐயோ நீ அவனைக் கொன்று என்ன லாபம்? என்னை இன்னும் பல நாய்களுக்கு இரையாக்கி விட்டு ஜெயிலுக்குப் போவாய். நாந் தான் தப்பிச்சிக்கிட்டு வந்துட்டேனே? இனிமே ஆக வேண்டியதைப் பார்ப்போம்.''

கங்காராம் சமாதானத்துக்கு வந்தான்.

''பின்ன என்ன தான் பண்றது சாரு? ஒண்ணும் புரியல்லியே. எனக்கும் ஒரு வேலை கிடக்கல்லே...''

பிறகு அவன் தயக்கத்துடன் தொடர்ந்தான்.

''எனக்கு ஒரு யோசனை தோணுது. நீ கொஞ்சநாள் உன் அம்மா வீட்டிலே போய் இரு. இங்கிருந்து கொஞ்ச தூரத்திலே 'லக்னோ'ன்னு ரொம்ப பெரிய ஊர் இருக்கு. அங்கே போனா நிச்சயம் ஏதாவது வேலை கெடைக்கும். நான் போயி எந்த வேலையாயிருந்தாலும் சேந்து காசை மிச்சம் பண்ணிக் கொண்டு வரேன். கொண்டு வந்த காசை வெச்சுண்டு உங்கப்பா ஊரிலே ஏதாவது தொழிலை ஆரம்பிக்கலாம்....

சொல்வது ரொம்ப சுலபமாக இருந்தது. கேட்பதற்கும் ரொம்ப இதமாக இருந்தது. திட்டத்தில் எந்த வித சிக்கலும் இல்லாத மாதிரி. ஆனால் சாருவுக்கு மனசில் பல வித பயங்கள், குழப்பங்கள்.

''அங்கே போனா வேலை கெடக்கும்னு என்ன நிச்சயம்? அப்படி வேலை கெடச்சாலும் கையிலே ரெண்டு காசு கெடச்சதும், என்னெ மறந்து போனாலும் போயிடுவே...''

கங்காராம் அவளை அணைத்துக் கொண்டான்.

''என்னைப்பத்தி நீ இவ்வளவு கேவலமா நினைக்கலாமா சாரு? உன்னை என்னிக்காவது இந்த மாதிரி சந்தேகம் வரும்படி நான் நடத்திருக்கேனா? என் சாருவை என்னாலே மறக்க முடியுமா?''

எதிர்காலம் ஒரு பெரிய கேள்விக் குறியாக இருக்கையிலும், அவர்கள் அந்த அணைப்புக்குள் தங்களை மறந்து ஒன்றிப் போனார் கள். வயிறு ஓலமிட ஆரம்பித்ததும் அவள் கொல்லையிலிருந்து வெங்காயத்தையும் முள்ளங்கியையும் பிடுங்கிக் கொண்டு வந்து நறுக்கி வைத்தாள். சோளமாவைப் பிசைந்து ரொட்டி சுட்டு கங்கா ராமுக்குக் கொடுத்து தானும் சாப்பிட்டாள். லக்னோவில் வேலை காத்துக் கொண்டிருக்கிற மாதிரி அவர்கள் பேசிக்கொண்டார்கள். அவள் சுறுசுறுப்பாய் மூட்டைக்கட்ட ஆரம்பித்தாள். அவள் சேமித்து வைத்திருந்த இருபது ரூபாய்கள் வழிச் செலவுக்குப் போதும் என்று கணக்குப் போட்டு அவர்கள் விடிவதற்கு முன்பே அவர்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினார்கள். யாரிடமும் சொல்லிக்கொண்டு போகாமலிருப்பதே தேவலை என்று தோன்றிற்று கங்காராமுக்கு. அவர்கள் ஏன் போகிறாய் என்று கேட்டால் என்ன பதில் சொல்லுவது?

சாருவை அவளது பிறந்தகத்தில் கொண்டுவிட்ட போது அவன் லக்னோவில் வேலை காத்திருக்கிற மாதிரியே பேசினான். அப்படிப் பேசப்பேச அவனுக்கே அங்கு தான் வேலைக்காக அலைய வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்கிற மாதிரி ஒரு பிரமையேற் பட்டது. மாப்பிள்ளை ஏதோ சீமைக்குப் போகிற மாதிரி சாருவின் பெற்றோர்கள் தங்கள் வறுமையிலும் அவனை ஆசார உபசாரம்

செய்தார்கள். அவன் ஒரு வழியாக லக்னோ போகும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும் தான் அவனுக்கு திடீரென்று மலைப்பாக இருந்தது. லக்னோவில் என்ன செய்யப் போகிறோம், அதுவும் சாருவும் கூட இல்லாமல் எப்படி சமாளிக்கப்போகிறோம் அத்தனைப் பெரிய ஊரில் என்று பயமாக இருந்தது. அந்தச் சண்டாளன் டாக்கூர் மட்டும் அத்தனைத் திமிர் பிடித்தவனாக இல்லாதிருந்தால்! டாக்கூரின் பண்ணையில் அவன் விசுவாசத்துடன் உழைத்ததெல்லாம் ஞாபகத் திற்கு வந்தது. நன்றி கெட்ட நாயல்லவா அந்த டாக்கூர்! பணத்தி மிரல்லவா அவனுக்கு அந்த தைர்யத்தை கொடுத்திருக்கிறது! அவன் நினைத்துக் கொண்டான் - லக்னோவில் ஒருவேளை அவனுக்கு வேலை கிடைத்து படிப்படியாக முன்னேறி பணக்காரனானால் நிச்சய மாக அவன் அந்த டாக்கூர் மாதிரி பணத்திமிர் பிடித்து அலைய மாட்டான். அவனது கற்பனை விரிந்தது. பெரிய வீட்டில் கை யெல்லாம் வளையல்கள் குலுங்க சாரு வாரனாசிப்பட்டில் வளைய வருவாள். முற்றம் நிறைய அவனுடைய குழந்தைகள் - வயோதிகத் தில் அவனையும் சாருவையும் உட்கார்த்தி வைத்து பொறுப்புக் களையெல்லாம் ஏற்றுக்கொள்ளப் போகும் பிள்ளைகள்....முகத்தில் புன்னகையும் திருப்தியும் துலங்கும் சாரு அவனுடைய சாரு...

யாரோ அவனை உலுக்கினார்கள். அவன் மிரண்டு போய்க் கண்களைத்தேய்த்து விட்டுக்கொண்டு விழித்தான்.

''லக்னோ வந்து விட்டதய்யா எழுந்திரு. இந்த மாதிரி தூங்கு மூஞ்சியாக இருந்தால் யாரும் வேலை கொடுக்க மாட்டார்கள்.''

அவன் பதறிச் சுருட்டிக் கொண்டு பஸ்ஸிலிருந்து இறங்கி சுற்று முற்றும் பார்த்தான். அடேய்யப்பா! அவன் பிரமித்துப் போனான். அந்தக் கட்டடங்களும் அந்த மனிதக் கும்பலும் அந்த இரைச்சலும்... அவன் சற்று பயந்தவனாய் கட்கத்தில் தனது சின்ன மூட்டையை சுமந்தபடி ஓர் ஓரமாக நின்றான். நாக்கு உலர்ந்து போகையில் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சற்றுத் தள்ளி இருந்த சாயா கடையில் ஒரு கோப்பைத் தேநீர் வாங்கிக் குடித்தான். பிறகு யாரையும் எதையும் கேட்கவே பயந்து கொண்டு அவன் நன்றாக

இருட்டியதும் ஓர் ஓரமாக உட்கார்ந்து கொண்டு மாமியார் கட்டிக் கொடுத்திருந்த ரொட்டியையும் பாகற்காய் ஊறுகாயையும் சாப்பிட்டு விட்டு மூடி சந்தடியடங்கியதும் ஒரு மூடிய கடையின் ரேழியில் படுத்து உறங்கிப் போனான்.

இரண்டு மூன்று நாள்கள் அலையாய் அலைந்தான். யார் யாரையோ கேட்டுப் பார்த்தான். அவனது பேச்சுக்கும் லக்னோலின் உருது கலந்த பாஷைக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. பாதி நேரம் அவர்கள் பேசுவது சரியாக விளங்கவில்லை. கட்டிக்கொண்டு வந்த சாப்பாடும் தீர்ந்து போயிற்று. இங்கு தொட்டதற்கெல்லாம் பைஸா கரைவதைப் பார்த்தால் அவன் தினத்துக்கு நான்கு ரூபாய் சம்பாதித்தாலும் அதில் ஏதும் அதிகமாக சேமிக்க முடியாது போலிருந்தது. நிமிஷமாய் தானும் சாருவும் நிர்மாணித்த கற்பனைக் கோட்டைகளுக்கு ஏதும் அஸ்திவாரமே இல்லை என்று புரிந்தபோது அவன் செய்வதறியாமல் திகைத்தான்.

நான்காம் நாள் ஹஸ்ரத்கஞ்ஜ் கடை வீதியில் பீடி புகைத்தபடி உட்கார்ந்திருக்கையில் ஒரு கரம் அவன் தோளில் உட்கார்ந்த போது அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். புன்னகையோடு பான்ட்டும் வெள்ளை ஷர்ட்டும் அணிந்த ஓர் ஆள் நின்றிருந்தான்.

''என்னப்பா ஏதும் வேலையில்லாதவன் மாதிரி இந்தக் காலை வேளையிலே இங்கே உட்கார்ந்திருக்கே?''

''வேலை ஏதும் இல்லை ஸாப். என்ன செய்வேன்?''

வெள்ளை ஷர்ட் இதமாக சிரித்தான்.

''அடப்பாவமே அப்படியா? ஊருக்குப் புதிசா?''

கங்காராம் எல்லா விவரமும் ஆதியோடு அந்தமும் சொன்னான். வெள்ளை ஷர்ட் வெகு பொறுமையோடும் அனுதாபத் தோடும் கேட்டுக் கொண்டிருந்தான்.

''அடாடா உன்னை முன்பே சந்திக்காமல் போனேனே இன்ன மும் மோசமில்லை. என்னோடு வா. வேலை வாங்கித் தரேன்.''

கங்காராம் திக்குமுக்காடிப் போனான், கடவுளைக் கண்ட மாதிரி.

''அப்படியா ஸாப்? எங்கே? எந்த இடத்திலே?''

''என்னோடு நீ வா பேசாமல். நான் அழைத்துப் போகிறேன்.''

கட்கத்தில் துணி மூட்டையை இடுக்கியபடி கங்காராம் வெள்ளை ஷர்ட்டைப் பின்பற்றி நடந்தான்.

''அதோ பார் அங்கே தான் உனக்கு வேலை கிடைக்கும்.''

கங்காராம் வியந்து போனான்.

''அடேயப்பா! இந்த இடத்திலா? என்ன வேலை?''

''சும்மா தொண தொணக்கக் கூடாது. நான் சொன்னபடி வாயை மூடிக்கொண்டு இருந்தாயானால் உனக்கு மாஸம் 200 ரூபாய் சம்பளத்தில் வேலை வாங்கித் தருவேன்.''

-அடேயப்பா 200 ரூபாயா?

கங்காராம் வாயை மூடிக்கொண்டு நடந்தான். வெள்ளை ஷர்ட் என்ன சொன்னாலும் செய்யத் தயாரானான்.

அந்தப் பெரிய வெள்ளைக் கட்டடத்துக்குள்ளே அவன் நேராக அழைத்துச் செல்லப்பட்டான். கங்காராம் திருதிருவென்று விழித்துக் கொண்டு தனக்குக் கொடுக்கப்படும் வேலை என்னவாக இருக்கும் என்று புரியாதபடி நடந்தான்.

''இதோ டாக்டர் அறை. உள்ளே வா.''

அவன் உள்ளே சென்றான்.

வெள்ளை ஷர்ட் ஒரு ஸலாம் அடித்தான்.

''ஒரு ஆளைக்கொண்டு வந்திருக்கிறேன்.''

டாக்டர் ''சபாஷ் என்றார். ''சொன்னபடி செய்வதில் நீ கெட்டிக்காரன்.''

டாக்டர் பாக்கெட்டிலிருந்து ஓர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து வெள்ளை ஷர்ட்டிடம் கொடுப்பதை கங்காராம் பார்த்தான்.

''இந்தாப்பா இந்த மசியில் கட்டை விரலை அழுத்தி இங்கே கையொப்பம் போடு.''

கங்காராம் போட்டான். பிறகு அவனை வேறு ஒரு அறைக்கு அழைத்துச் சென்று ஒரு கட்டிலில் படுக்கச் சொன்னார்.

''எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை.''

''தெரியும் படு!''

அவனுக்கு சொல்லாமலே அவன் கையில் ஏதோ சுருக்கென்று குத்தப்படுவது தெரிந்தது.

அவன் பீதியுடன் ''எனக்கு வேலை...'' என்று வாக்கியத்தை முடிப்பதற்குள் நினைவு தப்பிற்று.

அவன் கண் விழித்தபோது வேறு ஒரு அறையில் படுத்திருப்பது தெரிந்தது. முணுக் முணுக்கென்று பிறப்புறுப்பில் குத்து வலி இருப்பது புரிந்தது. அவன் திக்பிரமை அடைந்த மாதிரி எழுந்து உட்கார்ந்தான். உடம்பில் ஏதோ ஆயாஸம் ஏற்பட்டது. நேற்று வரை நன்றாக இருந்தானே, இன்று என்ன ஆகி விட்டது?

டாக்டர் வருவது தெரிந்தது.

''டாக்டர் எனக்கு என்ன உடம்பு?''

டாக்டர் முதுகைத் தட்டினார்.

''ஒன்றுமில்லை. கொஞ்சம் கோளாறு இருந்தது. இப்பொழுது சரியாகிவிட்டது. இரண்டு நாளைக்கு அதிகம் வேலை செய்யாதே.'' அவனுக்குச் சட்டென்று ஞாபகத்திற்கு வந்தது.

''டாக்டர் ஸாப் எனக்கு எப்போ வேலை கிடைக்கும்?''

''வேலையா? உன்னால் என் வேலை பிழைத்தது. போ, போ.''

டாக்டரின் சிரிப்பு அவனுக்குப் புரியவில்லை. அவர் போய் விட்டார். அங்கு இருந்த மற்றவர்களிடம் அவன் இதற் கெல்லாம் என்ன அர்த்தம் என்று கேட்டான்.

அவர்கள் உதட்டைப் பிதுக்கினார்கள். 'ஒன்றும் சொல்வதற் கில்லை' என்றார்கள். 'காலம் கெட்டு விட்டது... என்னென்ன செய்தார் கள்' என்று அவர்கள் கேட்டார்கள்.

நினைவில் இருந்ததை அவன் சொன்னான். இப்பொழுது இங்கே முணுக் முணுக்கென்று வலிக்கிறது என்றான்.

''ஆ, அதுதான். அந்த ஆபரேஷன்தான்.''

''எந்த ஆபரேஷன்?''

''இனிமேல் உனக்குக் குழந்தை பிறக்காமல் இருப்பதற்காக ஆபரேஷன்.''

அவன் நெருப்பை மிதித்த மாதிரி பதறி எழுந்தான்.

''குழந்தை பிறக்காமலிருக்கவா? எனக்குக் குழந்தைகளே இல்லையே? ஏன் இப்படிச் செய்தார்கள்?''

''யார் கேக்கிறது? இத்தனை ஆபரேஷன் செய்தாதான் அந்த டாக்டருக்குச் சம்பளம் கிடைக்கும்னு இப்ப ரூல்ஸ். அதனாலே கெடச்சவனையெல்லாம் இழுத்து கொண்டு வந்து....''

கங்காராம் மகா ஆவேசத்தோடு கிளம்பினான்.

''அப்படியா செஞ்சான் அந்த டாக்டர்? இப்பவே அவனை என்ன பண்ணறேன் பாருங்கள்!''

எல்லோரும் அவனைப் பிடித்து நிறுத்தினார்கள்.

''அட பைத்தியக்காரா! நீ என்ன பண்ண முடியும் அந்த டாக்டரை? ஏதாவது பண்ணினாலும் ஜெயிலுக்குத் தான் போவே! வாயை மூடிண்டு ஊருக்குப் போய்சேர்...''

அவன் திடீரென்று தாக்கப்பட்டவன் மாதிரி நின்றான். சாருவும் இதே வார்த்தை சொல்லித்தான் அன்று அவனைத் தடுத்தாள்.

மொத்தத்தில் அவனும் அவனது ஏழை சமூகமும் பலஹீனமான வர்கள். அக்கிரமத்தை எதிர்க்க துணிவில்லாத முதுகெலும்பற்ற வர்கள். இங்கிருக்கும் இவர்கள் எல்லோரும் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டு உதட்டைப் பிதுக்கிக்கொண்டு நெஞ்சில் நிறையும் ஆத்திரத்தை அமுக்கிக்கொண்டு காலம் கெட்டுவிட்டது என்று தலையாட்டும் ஏழைகள்-கையாலாகாதவர்கள்.

அவனது கற்பனை மாளிகையில், முற்றம் நிறைந்த கற்பனைக் குழந்தைகளை எண்ணி அவன் ஓவென்று அழுதான். அவனது சமூகத் தின் ஆத்திரமும் கோபமும் அழுகையும் ஒரு பெரிய அரசாங்கத்தைக் கவிழ்க்கக்கூடிய பலங் கொண்டது என்று தெரியாமல் அவன் அழுது கொண்டிருந்தான்.

கணையாழி 1977

✲